


# 21.09.2026 செய்திகள்

## இயற்கை சாண எரிவாயு தயாரிப்போருக்கு மத்திய அரசு ....

## உற்பத்தி செய்வதை முற்றிலும் வாங்குவதாக அறிவிப்பு

- கோபர்தன் எனப்படும் இயற்கை சாண எரிவாயு தயாரிக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு சலுகைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் எரிவாயுவில், 100 சதவீதம் வரை விற்பனை உத்தரவாதத்தை பெற முடியும்.
- இதற்காக அரசு நிர்ணயிக்கும் விலை குறைந்தபட்சம், 10 ஆண்டுகள் அமலில் இருக்கும்.
- 2025-ல் தூய்மை இந்தியா இயக்கத்தில் ஒரு பகுதியாக 'கோபர்தன்' எனப்படும், தேசிய சுழற்சி உயிரி ஆற்றல் திட்டம் துவங்கப்பட்டது.
- மாட்டு சாணம், வேளாண் பயிர்க்கழிவுகள், சமையலறை மற்றும் சந்தைக் கழிவுகள் போன்றவற்றை சேகரித்து, அவற்றை சி.பி.ஜி., எனப்படும் அழுத்தப்பட்ட சாண எரிவாயுவாகவும், இயற்கை உரமாகவும் மாற்றுவதே இந்த திட்டம்.
- சி.பி.ஜி., உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக, 23 ஆயிரத்து 731 கோடி ரூபாய் மதிப்பிலான கோபர்தன் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது.
- கோபர்தன் திட்டம், நடப்பு நிதியாண்டு துவங்கி, 2035-36 வரை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், புதிய ஆலை அமைக்கும் போது, ஆலையின் உற்பத்தித் திறனை பொறுத்து, ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படும் 1 டன்னிற்கு, 2 கோடி ரூபாய் வரை அரசு நேரடி மூலதன நிதியுதவி வழங்கும்.
- இந்த மானியம் ஆலைக்கு மட்டுமின்றி, கிராமங்களில் இருந்து சாணங்களை ஏற்றி வரும் டிராக்டர்கள், கழிவுகளை கொட்டும் கருவிகள் போன்றவற்றிற்கும் பொருந்தும்.
- புதிய விதிகளின்படி, சி.பி.ஜி.யின் 100 சதவீதம் வரை உறுதியான கொள்முதலை தகுதி உள்ள உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யலாம்.
- இதன்படி, உற்பத்தியாகும் எரிவாயுவை முற்றிலும் அரசே வாங்கிக்கொள்ளும். உற்பத்தி செய்யும் எரிவாயுவை நகர எரிவாயு வினியோக நிறுவனங்கள், கட்டாயம் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும்.
- இதற்கான ஒப்பந்தத்தை உரிய காலத்துக்குள் மேற்கொள்ளாத நகர எரிவாயு வினியோக நிறுவனங்களுக்கு எதிராக எரிவாயு ஒதுக்கீட்டை மறுசீரமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- வாகனங்களில் பயன்படுத்தப்படும் சி.என்.ஜி., எனப்படும், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவில், சி.பி.ஜி.,யை கட்டாயம் சேர்க்க வேண்டும்.
- நடப்பு நிதியாண்டில், 3 சதவீதமாகவும், அடுத்த நிதியாண்டில், 4 சதவீதமாகவும், 2028-29-ல், 5 சதவீதமாகவும் சேர்க்க வேண்டும்.

SURESH'

| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |

- உற்பத்தியாளர்களுக்கு நீண்ட கால வருவாய் பாதுகாப்பை வழங்கும் வகையில், சி.பி.ஜி.,க்கு ஒரு மில்லியன் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட், அதாவது மணிக்கு 294 கிலோவாட்டிற்கு, 2,110 ரூபாய் என்கிற நிலையான கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

» தவணை முறை

- இதன்படி, 25 சதவீத மீத்தேன் உள்ளடக்கத்தின் அடிப்படையில் கிலோவுக்கு, 98 ரூபாய் வழங்கப்படும். இந்த விலை அடுத்த, 10 ஆண்டுகளுக்கு, அதாவது 2036 மார்ச் 31 வரை அமலில் இருக்கும்.
- ஒவ்வொரு சி.பி.ஜி., திட்டத்துக்கும் அதிகபட்சமாக, 30 கோடி ரூபாய் வரை மூலதன உதவி வழங்கப்படும். புதிய ஆலைகளுக்கு, ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படும் ஒரு டன்னுக்கு, 1.25 கோடி ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும். இந்த நிதி உதவி தவணை முறையில் வழங்கப்படும்.
- சி.பி.ஜி.,யை கொள்முதல் செய்து ஒருங்கிணைக்கும் ஆப்பரேட்டராக மத்திய அரசுக்கு சொந்தமான, 'கெயில்' நிறுவனம் நியமிக்கப்பட்டு உள்ளது.

## 2030-க்குள் மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் செல்லும் புல்லட் ரயில் தயாரிக்க மத்திய அரசு இலக்கு

- மும்பை – அகமதாபாத் அதிவேக ரயில் திட்டத்தின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை ரயில்வே அமைச்சகம் தயாரித்துள்ளது.
- வரும் 2030-ம் ஆண்டுக்குள் ஒரு மணி நேரத்துக்கு 350 கி.மீ. வேகத்தில் இயங்கும் பி35 ரக சுதேசி புல்லட் ரயில்களை தயாரிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இதே 2030-ம் ஆண்டில்தான் ஜப்பான் தனது அடுத்த தலைமுறை ஈ10 தொடர் புல்லட் ரயில்களின் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்த ஈ10 ரயில்களுக்கு நிகரானது இந்தியாவின் பி35 என்பது குறிப்பிடத்தக்கது.
- மும்பை – அகமதாபாத் இடையேயான 508 கி.மீ. நீள அதிவேக ரயில் திட்டத்தின் திருத்தப்பட்ட செலவாக ரூ.2 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- இது 2015-ல் திட்டமிடப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டை விட இருமடங்காகும். இந்த கூடுதல் செலவான சுமார் ரூ.1 லட்சம் கோடி மத்திய அரசின் வரவு செலவு ஆதரவு மூலம் பெறப்படும்.
- தற்போது பயன்பாட்டில் உள்ள ஈ5 தொடர் ரயில்களின் உற்பத்தி படிப்படியாக நிறுத்தப்படுவதாக ஜப்பான் தரப்பில் 2024 டிசம்பரில் தெரிவிக்கப்பட்டது.
- இதனையடுத்து பி35 ரக புல்லட் ரயில்களை உருவாக்கும் பணியை இந்தியா தொடங்கியது.
- ஜப்பானின் ஈ10 ரயில்கள் 2030-ல் உற்பத்தியைத் தொடங்கி 2034-ல் பயன்பாட்டுக்கு வரும் என்பதால், அவை தயாரான பிறகு அவற்றை இந்தியத் தடங்களில் இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உலக அரங்கில் வலிமை பெறும் இந்தியா

- 18-வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் கூட்டறிக்கையான, 'நியூடெல்லி பிரகடனம்' (BRICS - New Delhi Declaration 2026), உலக நாடுகளுக்கு சில செய்திகளை வெளிப்படையாகவும், வேறு சிலவற்றைச் சொல்லாமலும் தெரிவிக்கிறது.
- பிரிக்ஸ் கூட்டமைப்பில் உறுப்பினராகவுள்ள 11 நாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டு, கூட்டாக வெளியிட்டிருக்கும் இந்த கூட்டறிக்கை சொல்லாமல் சொல்வது, அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ கூட்டு நாடுகளுக்கு நாங்கள் அஞ்சவில்லை என்பதுதான்.

» பிரிக்ஸ்

- அந்த வகையில் 2050-ம் ஆண்டு வாக்கில் உலகின் பொருளாதார வளர்ச்சி பிரேசில், ரஷ்யா, இந்தியா. சீனா ஆகிய 'வளரும் பொருளாதாரங்கள்' (எமெர்ஜிங் எக்கானமீஸ்) நாடுகளில் இருந்து வரும் என்று பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் ஜிம் ஓனில் குறிப்பிட்டார்.
- இதைக் கவனித்த அந்த நாடுகள் ஒன்று சேர்ந்து 2006-ல் தொடங்கிய பிரிக் அமைப்பு பிற்பாடு தென்னாப்பிரிக்காவையும், அதன்பின் மேலும் 6 நாடுகளையும் சேர்த்துக்கொண்டு, பிரிக்ஸ்+ என்ற பெயரில் இயங்கி வருகிறது.
- மேற்கத்திய நாடுகள் இல்லாத அமைப்பாக உருவாகி, வளர்ச்சி தேவைப்படும் (குளோபல் சவுத்) நாடுகளின் வலுவான குரலாக மாறியிருக்கிறது.

» இந்தியாவின் பங்கு

- கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து, பிரிக்ஸ் அமைப்பின் நோக்கங்கள் செயல்பாடுகளைத் தீர்மானிப்பதில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது.
- சுழற்சி முறையில் தலைமையேற்கும் வழக்கப்படி, 2012, 2016, 2021-க்குப் பின் மீண்டும் 2026-ம் ஆண்டு தலைமையேற்ற இந்தியா, கடந்த ஓராண்டில் உறுப்பு நாடுகளின் பல்வேறு நிலை அதிகாரிகள் மற்றும் தலைவர்களுக்கு இடையே 400 கூட்டங்கள் நடக்க ஏற்பாடு செய்தது.
- இறுதியில் ஒன்றுக்கொன்று இணக்கமாக இல்லாத ஈரான், ஐக்கிய அமீரகம் போன்ற நாடுகளையும் இணைத்து, பல முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார கருத்துகளை, ஒரு குரலில் கூட்டறிக்கையாக வெளியிட்டிருக்கிறது.

» அமெரிக்கா, சீனாவுக்கு எதிராக

- உலக வர்த்தக விதிமுறைகள், ஐக்கிய நாடுகளின் சார்ட்டர் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு மாறாக தன்னிச்சையாக நெருக்கடி தரும் நடவடிக்கைகளை எடுக்கும் நாடுகளை கூட்டறிக்கை கண்டிப்பதுடன், அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நீக்க அறிவுறுத்துகிறது.
- இவையெல்லாம் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், அமெரிக்காவையும், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பையும் குறிக்கின்றன.
- உற்பத்திக்கு தேவைப்படும், தொழில்நுட்பம், 'க்ரிட்டிக்கல் மினரல்ஸ்' போன்ற மூலப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றை ஆயுதமாக பயன்படுத்தக்கூடாது என்று மாநாட்டு உரையில் இந்தியப் பிரதமர் சீனாவையும் வைத்துக்கொண்டு குறிப்பிட்டது, இந்தியாவின் வலிமையைக் காட்டுகிறது.

» தீவிரவாதத்துக்கு எதிராக

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் போன்ற சர்வதேச அரங்குகளில் பாகிஸ்தானில் இருந்து வரும் எல்லை தாண்டிய தீவிரவாதம் குறித்து பேசி, அவற்றைத் தடுக்கவும், அப்படிப்பட்ட நாடுகளுக்கு உதவி செய்யாமல் இருக்குமாறும் உலக நாடுகளை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.
- இதற்கு போதிய ஆதரவு கிடைக்காத நிலையில், தற்போது சீனாவும் கையெழுத்திட்டிருக்கும் கூட்டறிக்கையில், எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தீவிரமாக கண்டிப்பதுடன் காஷ்மீரில் நடந்த பஹல்காம் தாக்குதலைக் குறிப்பிட்டு, இது போன்றவற்றை சிறிதளவும் பொறுக்கமாட்டோம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

» பொது அமைப்புகளில் பிரதிநிதித்துவம்

- உலக நாடுகளுக்கு பொதுவான அமைப்புகளாக இருக்கிற ஐ.நா. மற்றும் ஐ.நா. பாதுகாப்புக் குழு ஆகியவற்றில் வளர்ந்த, மேற்கத்திய நாடுகளே அதிக பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு, அவற்றின் விருப்பம் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப செயல்பட்டு வருவதை மாற்ற வேண்டும் என்கிறது கூட்டறிக்கை.

SURESH'

- குறிப்பாக வளரும் நாடுகளுக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறது.

» இந்தியாவுக்கு ஆதரவாக சீனா

- UNSC-ல் இந்தியாவுக்கும் பிரேசிலுக்கும் கூடுதல் வாய்ப்புகள் வேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரிக்ஸ் அமைப்பில் உள்ள சீனாவும் ஆதரவாக மாறியிருப்பதை கூட்டறிக்கை வெளிப்படுத்துகிறது.

» நியூ டெவலப்மெண்ட் பேங்க்

- மேற்கத்திய நாடுகளின் அரசியலுடன் ஒத்துப் போகாத நாடுகளுக்கு உலக வங்கியிலிருந்து நிதி கிடைக்காத நிலையை மாற்றுவதற்காக பிரிக்ஸ் அமைப்பு 2015-ம் ஆண்டு நியூ டெவலப்மென்ட் பேங்க் என்று ஒரு வங்கியைத் தொடங்கியது.
- இவ்வங்கி பிரிக்ஸ் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவைப்படும் முதலீடுகளை கொடுத்தும், அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டால் கொடுத்தும் உதவி வருகிறது.

» அமெரிக்க டாலருக்கு மாற்று?

- அமெரிக்க டாலருக்கு மாற்றாக பிரிக்ஸ் நாடுகள் சார்பில் பொதுவானதொரு நாணயத்தை (கரன்சி) உருவாக்கலாம் என்று தொடர்ந்து பேசப்பட்டு வந்தாலும், இந்தக் கூட்டறிக்கை அது குறித்து எதுவும் சொல்லவில்லை.
- மாறாக, எல்லா நாடுகளுக்கும் பொருத்தமானது என்று ஒன்று இல்லை (ஒன் சைஸ்ஃபிட்ஸ் ஆல்) என்றும் அதனால், நிதானமாக போகலாம் என்றும் கூட்டறிக்கைத் தெரிவிக்கிறது.
- அதனால் உறுப்பு நாடுகள் அவர்களது சொந்த நாணயத்தை (லோக்கல் கரன்சி) வைத்தே அவர்களுக்குள் வர்த்தகத்தை அதிகரிக்கலாம் என்றும், எவ்வாறு நாடுகள் இடையிலான பணப் பட்டுவாடாவை விரைவாகவும், எளிதாகவும் அதேநேரம் பாதுகாப்பாகவும் செய்யலாம் என்பதை 'பிரிக்ஸ் பேமெண்ட் டாஸ்க் போர்ஸ்' என்ற ஒத்துழைப்புக்கான குழுவில் உள்ள உறுப்பு நாடுகளின் மத்திய வங்கித் தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்றும் தெரிவிக்கிறது.

» இன்வெஸ்ட்மென்ட் பிளாட்பார்ம்

- வங்கியின் செயல்பாடுகளை விரிவாக்கி, உறுப்பு நாடுகளுக்கு அவர்களது கரன்சியிலேயே நிதி கொடுப்பது, அதற்கான நிதி ஆதாரத்தை எவ்வாறு திரட்டுவது போன்றவை குறித்தும் டாஸ்க் போர்ஸ் ஆராயும் என்றும், இன்வெஸ்ட்மென்ட் பிளாட்பார்ம் உருவாக்குவது குறித்து உறுப்பு நாடுகள் தொடர்ந்து பேச முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கிறது.

» தடையற்ற எரிசக்தி மூலப்பொருள் விநியோகம்

- மேற்கு ஆசிய போரை முடிவுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தை மற்றும் தூதரகங்கள் மூலமே நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு அமைதியாக ஏற்படுத்தி, எரிசக்தி பொருட்களின் விநியோகம், வர்த்தகம், நுகர்வு ஆகியவற்றில் தடை ஏற்படாமல் இருக்க உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது.
- ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், சீனா, ரஷ்யா என பல நோக்கங்கள் உள்ள நாடுகளை இணைத்து, கூட்டாக அறிக்கை வெளியிட வைத்திருக்கிறது இந்தியா.
- மேலும், இந்த மாநாட்டில் தலைவர்கள் கலந்துகொண்ட விதமும், ஆற்றிய உரைகளும், மாநாட்டு நேரத்தில் வெளியே நடந்த இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புகள் மற்றும் பேச்சுவார்த்தைகளும், தலைமையேற்று நடத்திய இந்திய ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.
- அது மட்டுமல்ல, தற்போதைய போர்கள், வர்த்தகத் தடைகள் நிரம்பிய உலகில், இந்தியாவின் யோசனைகள், பேச்சுவார்த்தைகள், நடவடிக்கைகளுக்கு உருவாகி வரும் மதிப்பையும் வரவேற்பையும் காட்டுவதாக இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

SURESH'